பெருநகர சென்னை மாநகராட்சி
செய்தி வெளியீடு

**செ.வெ.எண்.130** **நாள்: 31.08.2019**

**சென்னை மாவட்டத்தில் உள்ள சட்மன்ற தொகுதிகளின் வாக்காளர்கள் நாளை முதல் புதிய செயலியை பயன்படுத்தி தங்கள் விவரங்களில் திருத்தங்களை அவர்களே மேற்கொள்ளலாம் என சென்னை மாவட்ட தேர்தல் அலுவலர் / பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, சென்னை மாவட்டத்தில் உள்ள 16 சட்டமன்ற தொகுதிகளில் வாக்காளர்கள், வாக்காளர் பட்டியலில் உள்ள தங்கள் விவரங்களில் திருத்தங்களை அவர்களே சிறப்பு செயலி மூலம் மெற்கொள்ளும் திட்டம் (Electoral Verification Programme) 01.09.2019 முதல் 30.09.2019 வரை ஒரு மாதக்காலத்திற்கு செயல்பட உள்ளது.

இத்திட்டத்தின் மூலம் வாக்காளர்கள் வாக்காளர் பட்டியலில் உள்ள அவர்களது பெயர், பிறந்த தேதி. முகவரி. புகைப்படம் மற்றம் பாலினம் உள்ளிட்ட விவரங்களில் திருத்தங்களை அவர்களே மேற்கொள்ளும் வசதி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதற்காக N.V.S.P., வாக்காளர் உதவி கைப்பேசி செயலி (Voter helpline Mobile app), 1950 அழைப்பு மையம் (மூத்த குடிமக்கள் மற்றும் மாற்று திறனாளிகளுக்கு மட்டும்), வாக்காளர் உதவி மையத்தில் (Voter Facilitation centre) உள்ள வாக்காளர் பதிவு அலுவலகம் (Electoral Register Office) மற்றும் இ–சேவை மையம் ஆகியவற்றின் மூலம் வாக்காளர்கள் தனது வாக்காளர் புகைப்பட அடையாள எண்ணை உள்ளீடு (Input) செய்து தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஆவணங்களில், ஒன்றை கொண்டு திருத்த விவரங்களை பதிவேற்றம் செய்யலாம்.

அவ்வாறு, வாக்காளர்களால் பதிவு செய்யப்பட்ட விவரங்கள் வாக்குசாவடி நிலை அலுவலர்கள் மூலம் (B.L.O.) கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு திருத்தங்கள் சரிபார்க்கப்பட்டு 15.10.2019 அன்று வெளியிடப்படவிருக்கும் ஒருங்கிணைந்த வரைவு வாக்காளர் பட்டியலில் (Integrated draft roll) வெளியிடப்படும்.

மேலும் 02.11.2019 (சனிக்கிழமை), 03.11.2019 (ஞாயிற்றக்கிழமை), 09.11.2019 (சனிக்கிழமை) மற்றும் 10.11.2019 (ஞாயிற்றக்கிழமை) ஆகிய நாட்களில் அந்தந்த வாக்குசாவடிகளில் நடைபெறவுள்ள சிறப்பு முகாம்கள் வாயிலாகவும் வாக்காளர்கள் திருத்தங்களை மேற்கொள்ளலாம். எனவே, வாக்காளர்கள் இந்த வாய்ப்பினை பயன்படுத்திக்கொள்ளுமாறு சென்னை மாவட்ட தேர்தல் அலுவலர் / பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,
பெருநகர சென்னை மாநகராட்சி